**செய்தி வெளியீடு எண் : 1223** **நாள் : 21.07.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

சென்னை மாவட்டம், திருவொற்றியூர் மற்றும் மணலி தொழிற்சாலைப் பகுதியில் மக்கள் வசிக்கும் இடங்களில் LPG மணம் போல் துர்நாற்ற வாயு கசிவு உணரப்பட்டதாக செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. இதனைத் தொடந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர்களால் இப்பகுதிகளில் பலமுறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக மணலியில் உள்ள சென்னை பெட்ரோலிய நிறுவனத்திற்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டன. இருப்பினும் மக்களின் சுகாதார நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு இந்நேர்வில் உடனடியாக மேற்படி வாயு கசிவு ஏற்படுவதற்கான காரணம் மற்றும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து ஆய்வு நடத்த பின்வரும் வல்லுநர்களை (Experts) கொண்ட ஒரு தொழில்நுட்பக் குழு அமைத்து உத்தரவிட்டுள்ளது.

i. டாக்டர். கோகுல்,
விஞ்ஞானி–இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம்.

ii. டாக்டர். சிவதாணு பிள்ளை,
விஞ்ஞானி–இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம்.

iii. டாக்டர். எச்.டி.வரலஷ்மி,
விஞ்ஞானி–E, மண்டல இயக்குநர், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை.

iv. டாக்டர்.எஸ்.எம்.சிவ நாகேந்திரா,
பேராசிரியர், சுற்றுச்சூழல் மற்றும் நீர் வள ஆதார பொறியியல், கட்டட பொறியியல் துறை, இந்திய தொழில்நுட்ப நிறுவனம், மெட்ராஸ்.

v. டாக்டர்.என்.பாலசுப்பிரமணியன், பேராசிரியர், வேதியியல் பொறியியல் துறை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25.

இந்த தொழில்நுட்பக் குழு உடனடியாக மணலி மற்றும் திருவொற்றியூர் தொழிற்பகுதிகளில் ஆய்வு செய்து தனது அறிக்கையினை இரண்டு நாட்களில் அரசுக்கு வழங்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

சிறப்புச் செயலாளர்
(சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் – வனத் துறை)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in